# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (External Degrees)

### Part 1- Examination in Bachelor of Economics-2008/2009

### Proper/ Repeat (May/ June-2011)

### EXE 2063 Labour Economics

LIBRARY
30 DEC 20
Eastern University, Sri Lanka

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்: 03 மணித்தியாலங்கள்

1. i. உற்பத்திக் காரணிகளில் ஒன்றான ஊழியத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்குக?
(6 புள்ளிகள்)

ii. ஊழியச் சந்தையில் தொழில் வழங்குனரும் தொழிலாளியும் எவ்வாறு சமநிலை அடைகின்றனர் என்பதை பொருத்தமான வரைபடத்துடன் விளக்குக.
(6 புள்ளிகள்)

iii. ஊழியச் சந்தையோடு தொடர்புடைய பிரதான மாறிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
(8 புள்ளிகள்)

2. i. ஊழியக் கேள்விக் கோட்டின் நகர்விற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

ii. ஒரு தனிமனிதனது ஊழிய நிரம்பலில் நேரஒதுக்கீடு பற்றிய தீர்மானங்கள் எவ்வாறான காரணிகளில் தங்கியுள்ளன என்பதை விளக்குக.
(8 புள்ளிகள்)

iii. ஒரு சிறிய நிறவனத்தினுடைய ஒரு வாரத்திற்கான மொத்த பௌதீக உற்பத்தியானது(Total Physical Product)பல்வேறு கூலி மட்டத்தில் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. ஒரு அலகு முடிவுப்பொருளானது ரூபா. 100 விலை வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

| ஊழியர்களின் எண்ணிக்கை | மொத்த பௌதீக உற்பத்தி ( TPP) | மொத்த உற்பத்தி வருமானம் ( TRP) | எல்லை உற்பத்தி வருமானம் ( MRP) |
|---|---|---|---|
| 1 | 10 | | |
| 2 | 24 | | |
| 3 | 36 | | |
| 4 | 44 | | |
| 5 | 50 | | |
| 6 | 53 | | |

அ. மொத்த உற்பத்தி வருமானத்தைக் கணிக்குக.
ஆ. எல்லை உற்பத்தி வருமானத்தைக் கணிக்குக
இ. வாரம் ஒன்றிற்கு ஒரு ஊழியருக்கான கூலி ரூபா.600, ரூபா.300, ரூபா.1200 ஆக காணப்படும் போது எத்தனை ஊழியர்களை அந்நிறுவனம் வேலைக்கமர்த்த முடியும்?
(8 புள்ளிகள்)

3. i. ஊழியத்திற்கான கேள்வி நெகிழ்ச்சியினை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளை அடையாளம் காண்க.

(4 புள்ளிகள்)

ii. நிறைபோட்டி மற்றும் தனியுரிமை ஊழியச் சந்தையில் ஊழிய எல்லைச் செலவிற்கும் ($ME_L$) கூலிக்கும்(W) இடையிலான தொடர்பினை விளக்குக.

(8 புள்ளிகள்)

iii. தனியுரிமைச் சந்தையின் கூலி அதிகரிப்பில் தொழிற் சங்கங்களின் பங்களிப்பினை வரைபடம் மூலம் விளக்குக.

(8 புள்ளிகள்)

4. i. " ஒரு நிறைபோட்டிச் சந்தையில் ஒரே தன்மையான ஊழியர்கள் ஒரே வகையான தொழிலில் ஈடுபடும் போது ஒரேயளவான சம்பளத்தினை பெற வேண்டும். ஆனால் நடைமுறையில் வேறுபட்ட கூலிவீதத்தினைக் காணமுடிகின்றது" இதற்கான காரணங்களை பொருத்தமான வரைபடங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. " பௌதீக மூலதனத்தைப் போலவே கடந்த கால முதலீட்டின் ஒரு பெறுபேறாகவே மனித மூலதனமானது இருப்பதுடன், எதிர்கால வருமானங்களை உருவாக்குவதே அதன் நோக்கமாகும்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

( 10 புள்ளிகள்)

5. i. " வேலையின்மை வீதமானது அதிகரித்துச் செல்லுதல் ஒரு நாட்டின் முக்கிய பொருளாதாரப் பிரச்சினையாகும்". இலங்கையின் அநுபவத்தினைக் கொண்டு இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்பும் இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும் பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)